பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

அனுப்புநர்
திரு. இரா.வாழவந்தான், பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம்,
6, சன்னதி தெரு, சுப்ரமணிய நகர்,
சூரமங்கலம், சேலம் –636 005.
Telephone No :0427-2448625,
email: ddslmregion @gmail.com,

பெறுநர்
செயல் அலுவலர்,
ஆலம்பாளையம் பேரூராட்சி,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நாள்.28.11.2019

ந.க.எண்.2478/2019 சேம–3

ஐயா,

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் அனுமதி – தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், சேலம் மண்டலம் – நாமக்கல் மாவட்டம் – குமாரபாளையம் வட்டம் – ஆலம்பாளையம் பேரூராட்சி – பள்ளிபாளையம் கிராமம் – ச.எண்.382/12, 383/1 பகுதி, 383/2 பகுதியில் 1.189 ஹெக்டர் பரப்பு கொண்ட இடத்தில் 6 பிளாக்குகள் கொண்ட 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1960/உ.பொ(தி)/உசெ, நாள்.18.01.2019 மற்றும் 26.03.2019.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/2009/பிஏ2, நாள். 16.04.2009.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/2009/பிஏ1, நாள். 04.04.2012.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017/சிபி, நாள். 28.09.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 14227/2017/சிபி, நாள். 14.12.2017.
6. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 14.10.2019 (நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது).
7. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
8. அரசாணை எண். 18, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.02.2019.
9. உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணிகள், நாமக்கல் அவர்களின் ஓ.மு. எண். 5601/ஆ/2018, நாள். 14.09.2018.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/ந.ஊ.2, நாள்.31.10.2019.

--------

ஆணை:

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், ஆலம்பாளையம் பேரூராட்சி, பள்ளிபாளையம் கிராமம், ச.எண்.382/12, 383/1 பகுதி, 383/2 பகுதியில் 1.189 ஹெக்டர்

Scanned by CamScanner

Scanned by CamScanner

பரப்பு கொண்ட இடத்தில் 6 பிளாக்குகள் கொண்ட 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு, <u>"A to R"</u> என எல்லையிட்டு <u>ம.வ/ம(சே) எண்.1031/2019</u> என எண்ணிட்டு மனையிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.

28/11/19

<u>நகல்</u>

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம், சேலம் – 636 007. — பத்தி ஒன்று மட்டும்.

Scanned by CamScanner

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. இரா.வாழவந்தான், பி.இ.

ந.க.எண்.2478/2019 சேம–3 நாள்.28.11.2019

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் அனுமதி – தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், சேலம் மண்டலம் – நாமக்கல் மாவட்டம் – குமாரபாளையம் வட்டம் – ஆலம்பாளையம் பேரூராட்சி – பள்ளிபாளையம் கிராமம் – ச.எண்.382/12, 383/1 பகுதி, 383/2 பகுதியில் 1.189 ஹெக்டர் பரப்பு கொண்ட இடத்தில் 6 பிளாக்குகள் கொண்ட 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1960/உ.பொ(தி)/உசெ, நாள்.18.01.2019 மற்றும் 26.03.2019.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/2009/பிஏ2, நாள். 16.04.2009.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/2009/பிஏ1, நாள். 04.04.2012.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017/சிபி, நாள். 28.09.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 14227/2017/சிபி, நாள். 14.12.2017.
6. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 14.10.2019 (நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது).
7. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
8. அரசாணை எண். 18, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.02.2019.
9. உதவி மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணிகள், நாமக்கல் அவர்களின் ஒ.மு. எண். 5601/ஆ/2018, நாள். 14.09.2018.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/ந.ஊ.2, நாள்.31.10.2019.

-------

ஆணை:

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், ஆலம்பாளையம் பேரூராட்சி, பள்ளிபாளையம் கிராமம், ச.எண்.382/12, 383/1 பகுதி, 383/2 பகுதியில் 1.189 ஹெக்டர் பரப்பு கொண்ட இடத்தில் 6 பிளாக்குகள் கொண்ட 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு, **"A to R"** என எல்லையிட்டு

Scanned by CamScanner
Scanned by CamScanner

ம.வ/ம(சே) எண்.1031/2019 என எண்ணிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

அமையும் உத்தேச கட்டுமான பரப்பு விவரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

மனையிடத்தின் பரப்பு : 1.189 ஹெக்டர் (அ) 11890.00 சதுர மீட்டர்

உத்தேச கட்டுமானப் பரப்பு விபரம்

| கட்டிட பரப்பு | Block-1,2,3 Area | Block-4 Area | Block-5 Area | Block-6 Area |
|---|---|---|---|---|
| தரை தளம் | 444.65 ச.மீ. | 296.80 ச.மீ. | 592.48 ச.மீ. | 149.00 ச.மீ. |
| முதல் தளம் | 444.65 ச.மீ. | 296.80 ச.மீ. | 592.48 ச.மீ. | 149.00 ச.மீ. |
| இரண்டாம் தளம் | 444.65 ச.மீ. | 296.80 ச.மீ. | 592.48 ச.மீ. | 149.00 ச.மீ. |
| மூன்றாம் தளம் | 444.65 ச.மீ. | 296.80 ச.மீ. | 592.48 ச.மீ. | 149.00 ச.மீ. |
| TOTAL | 1778.60 ச.மீ. | 1187.20 ச.மீ. | 2369.92 ச.மீ. | 596.00 ச.மீ. |

- Floor Space Index (FSI) - 0.88
- Plot Coverage - 22.04%
- Plinth Area of all Blocks - 2369.92 * 1 = 2369.92 sq.m

  - 1783.20 * 3 = 5349.60 sq.m
  - 1187.20 * 1 = 1187.20 sq.m
  - 596.00 * 1 = 596.00 sq.m

  --------------------

  Total = 9502.72 sq.m

  --------------------

மேற்கண்ட உத்தேச 6 பிளாக்குகளில் 256 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.து.இ.(சே)எண்.37/2019 என எண்ணிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1) As per Ministry of Environment, Forest and Climate change Notification, dated: 22.12.2014, "The buildings shall ensure sustainable environmental Management, solid and liquid waste Management, rain water harvesting and may use recycled materials such as fly ash bricks".

2) As per G.O(Ms)No.161, H&UD Department, dated: 26.06.2013 "OSR portion is earmarked as **PARK** and kept open to sky without any construction.

3) "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

Scanned by CamScanner

Scanned by CamScanner

19 7

4) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக்கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setbacks), வாகன நிறுத்தம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

5) G.O.Ms.No.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019–ன் படி, தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

6) கட்டடம் கட்டடப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

7) Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the Local Bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/licensed surveyors and the structural engineer associated with the development shall ensure the developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

8) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

9) The provision in the G.O.(Ms). No. 17, Housing and Urban Development (UD 4(3)) Development, dated 05/02/2016 relating to installation and use of solar energy system should be followed.

10) தீயணைப்புத் துறையின் தடையின்மை சான்று மற்றும் பொது பணித் துறையின் வாய்க்கால் குறித்து உரிய தடையின்மை சான்று பெறப்பட வேண்டும். பெறப்பட்டப்பின் மேற்கண்ட துறைகளின் நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

11) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு W.P.(MP)No. 6912 and 6913 of 2019–ல் நீதிமன்ற உத்தரவு நாள். 02.04.2019–ன் படி பின்பற்றப்பட வேண்டும்.

<u>பொது நிபந்தனைகள்</u>

1. உத்தேச கட்டுமானத்திற்கு **Solar Water Heater System** அமைக்கப்பட வேண்டும்.

2. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

3. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்திற்கு எந்தவித மாற்றமும்செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின்முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

4. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

Scanned by CamScar
Scanned by CamScanner

5. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

6. **Site Plan–ல்** காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலை நிறுத்தப்படவேண்டும்.

7. உத்தேச கட்டுமானத்திற்கு தேவையான அளவிற்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1), நாள். 03.11.2004–ன்படி செப்டிக் டேங்கில் **"U" Trap** அமைக்கப்பட வேண்டும்.

9. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிக்கையின்படி உத்தேச கட்டிடத்தின் **"FLY Ash Bricks"** மற்றும் **Materials** பயன்படுத்தப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச இடத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. The Applicant/developer, Government Departments and also the architects/Registered Engineers and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

12. மத்திய மற்றும் மாநில அரசு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டு, அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

13. பார்வை 8–ல் சுட்டிய அரசாணையின் படி கீழ்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(i) The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall not put the building to use without obtaining Completion Certificate from The Deputy Director of Town & Country Planning, Salem Region, Salem.

(ii) a.) The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit the application along with the plan showing the Site Boundary, dimension of the building and the setback on all around and the plan must be authenticated by the applicant and Architect/Structural Engineer/ Licensed Surveyor for the issue of Construction Continuance Certificate (CCC).

b.) Also, the Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit application along with a drawing / plan showing the actual construction made at site when the construction is completed without any requirement of further civil works for the issue of Completion Certificate (CC).

(iii) The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which

Scanned by CamScanner
Scanned by CamScanner

Technical Clearance is issued, shall comply any other conditions/directions stipulated in the operational guidelines issued/subsequently to be issued by the DTCP.

உள்ளாட்சி நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி செயல் அலுவலர், ஆலம்பாளையம் பேரூராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக செயல் அலுவலர், ஆலம்பாளையம் பேரூராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு செயல் அலுவலர், ஆலம்பாளையம் பேரூராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.

**இணைப்பு**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் 2 தொகுப்புகள்.

**பெறுநர்**
செயல் அலுவலர்,
ஆலம்பாளையம் பேரூராட்சி,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

**நகல்**
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம், சேலம் – 636 007.
— பத்தி ஒன்று மட்டும்.

— True Copy —
AEE

Assistant Executive Engineer,
Tamilnadu Slum Clearance Board,
Salem Division.

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Salem Division, Salem-7.

Scanned by CamScanner

Scanned by CamScanner

23 9

# ஆலாம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை – திரு.எம்.எஸ்.சண்முகம் எம்.எஸ்.சி.,

மூ.மு.எண். 499 / 2019

நாள்.03.01.2020

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – கட்டிட வரைப்பட அனுமதி – பேரூராட்சி நிர்வாகம் – ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி – புல எண் 382/12, 383/1பகுதி, 382/2ல் – 1.189 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் – தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் – தரைதளம், முதல்தளம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்கள் கொண்ட 6 பிளாக்குகளில் 256 குடியிருப்புகள் கட்டிடத்திற்கு – நகர் ஊரமைப்பு துறையினரால் திட்ட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டது – கட்டிடத்திற்கு அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. சேலம் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) சேலம் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 2478/2019/சேம–3, நாள். 28.11.2019
2. ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். 355, நாள். 13.12.2019
3. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் நாள்.16.12.2019
4. இவ்லுவலக இதே எண்ணிட்ட கடிதம் ந.க.எண். 499/2019 நாள். 26.12.2019
5. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடித எண்.1110/அ1/2019 நாள். 31.12.2019

* * * * *

**உத்தரவு :–**

நாமக்கல் மாவட்டம், ஆலாம்பாளையம் பேரூராட்சி, பள்ளிபாளையம் கிராமம், புல எண். 382/12, 383/1பகுதி, 382/2ல் 1.189 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மனை நிலத்தில் தரைதளம் முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் ஆகிய தளங்களில் 6 பிளாக்குகள் கொண்ட 256 குடியிருப்பு கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதலை உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள தெரிவித்து, பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்தரவில் மேற்படி கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க தொழில் நுட்ப இசைவு வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| கட்டிட பரப்பு | Block '1,2,3' | Block '4' | Block '5' | Block '6' | Total |
|---|---|---|---|---|---|
| தரைதளம் | 444.65 x 3 ச.மீ = 1333.95 | 296.82 ச.மீ | 592.59 ச.மீ | 149.00 ச.மீ | 2372.36 ச.மீ |
| முதல்தளம் | 444.65 x 3 ச.மீ = 1333.95 | 296.82 ச.மீ | 592.59 ச.மீ | 149.00 ச.மீ | 2372.36 ச.மீ |
| இரண்டாம் தளம் | 444.65 x 3 ச.மீ = 1333.95 | 296.82 ச.மீ | 592.59 ச.மீ | 149.00 ச.மீ | 2372.36 ச.மீ |
| மூன்றாம் தளம் | 444.65 x 3 ச.மீ = 1333.95 | 296.82 ச.மீ | 592.59 ச.மீ | 149.00 ச.மீ | 2372.36 ச.மீ |
| மொத்தம் | | | | | 9489.44 ச.மீ |

மேலும், பார்வை 4ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில், பார்வை 2ல் காணும் ஆலாம்பாளையம் பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்தின்படி, அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கான அனுமதி பெறுவதற்கு உரிய தொகைகளை செலுத்தி அனுமதி பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 5ல் காணும் விவரப்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டிட உரிம கட்டணமாக தொகை ரூ. **9,26,950/–** (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து மட்டும்) காசோலை மூலமாக (காசோலை எண். 563933, நாள். 31.12.2019) செலுத்தப்பட்டுள்ளது.

//த.பி.பா..

Scanned by CamScanner

எனவே, பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் தொழில் நுட உத்தரவின்படியும், பார்வை 2ல் காணும் ஆலாம்பாளையம் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், 6 பிளாக்குகள் (தரைதளம், முதல் தளம், இரண்டாம்தளம் மற்றும் மூன்றாம் தளம்) (G+3) 256 குடியிருப்புகள் கொண்ட தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய கட்டிடத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் கண்டுள்ளவாறு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண் 2478/2019/சேம–3, நாள். 28.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) இந்த அனுமதி 03.01.2020 முதல் 02.01.2025 வரை ஐந்து வருட காலத்திற்கு செல்லத்தக்கதாகும் (தமிழ்நாடு அரசிதழ் எண். 86, பகுதி IV பிரிவு 2, பக்கம் எண். 61, நாள். 30.03.2017)
2) பேரூராட்சி, அரசாங்க நிலத்தில் அல்லது தெருவில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தால் முன் அறிவிப்பின்றி ஆக்கிரமிப்பு பகுதி பேரூராட்சி...ால் அகற்றப்படும்
3) தெருவை அனுசரித்து போடப்பட்டிருக்கும் 1.30 மீட்டர் காலி இடம் விட்டு கட்டிடம் கட்ட வேண்டும் மேற்படி இடத்தில் படிகள் தவிர வேறு எந்த விதமான கட்டிடமும் கட்டக் கூடாது.
4) சாக்கடை மீது படிகள் மற்றும் இதர தடுப்புகள் ஏதுவும் கண்டிப்பாக கட்டக்கூடாது
5) கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது
6) அங்கீகாரம் செய்யப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன்கூட்டியே திருத்திய அனுமதி பெற்றுக் கொண்ட பிறகே கட்டிடம் கட்ட செய்ய வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்துக்கு மாறுதலால் கட்டிடம் கட்டியது தெரியவந்தால் கட்டிடத்தினை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
7) கட்டிட வேலை நடக்கும் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒரு பிரதி வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலரின் ஆய்வின் போது காண்பிக்க வேண்டும்
8) கழிப்பிடம், சாக்கடைத் தொட்டி முதலியன சுகாதார முறைப்படி தளம் போடப்பட்டும், எளிதாக சுத்த செய்ய ஏதுவான மார்க்கம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்
9) தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் பிரிவு எண் 26 மற்றும் 33ன்படி சுகாதாரச் சான்று பெறாமல் கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடிவைக்கவோ கூடாது
10) 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 89–ன்படி கட்டிடம் கட்டி முடிந் அல்லது குடியேறின 15 நாட்களுக்குள் அது விவரம் நிர்வாக அலுவலர் அவர்களுக்( தெரியப்படுத்துவதுடன், கட்டிடத்தில் முடிவான வரைப்படம் ஒரு பிரதியும் அனுப்பி வைக்க வே. .டு கட்டிடத்திற்கு செலவான மொத்த தொகையும் தெரிவிக்க வேண்டும்.
11) கட்டிட வேலை தொடங்கும் முன் மின் இணைப்பு இருந்தால் அதை அப்புறப்படுத்திக் கொள் வேண்டும்
12) நீரடிக்கழிப்பிடம் கட்ட வேண்டும் (நவீன கழிப்பிடம்)
13) எல்லைச்சுவர் தெரு மட்டத்திலிருந்து 1.52 மீட்டருக்கு மேல் கட்டக்கூடாது. தெரு பக்கமுள் கதவுகள் உட்புறம் திறக்கும்படி அமைக்கப்பட வேண்டும்
14) சமையல் அறை, குளிக்கும் அறை முதலியவைகள் வசதியாகவும், புகை வெளியேற கூண்டுகளு கட்ட வேண்டும். காற்று வசதிக்கு வேண்டிய சன்னல் கதவுகள் அமைக்க வேண்டும்
15) மின்சார கம்பிக்கும், கட்டிடத்திற்கும் 1.75 மீட்டருக்கும் மேலாகவும், செங்குத்துக்கு 4.5 மீட்டருக் மேலாகவும் இருக்க வேண்டும்
16) கட்டிடத்தில் எழுத்து மூலமுள்ள அறிக்கையின்படி நிர்வாக அலுவலருக்கு தமிழ்நாடு மாவட் நகராட்சி சட்டத்தின் கீழ் அல்லது தமிழ்நாடு மாவட்ட நல்வழி சட்டத்தின் கீழ் எவ்விதமான மாறுதல் செய்வதற்கு உரிமையுண்டு

Scanned by CamScanner

17) கட்டிடம் கட்டும் பொழுது கட்டிட நிலத்தின் வழியாக தண்ணீர் குழாய்களோ, சாக்கடை குழாய்களோ செல்வதைக் காணும் பட்சத்தில் தற்சமயம் வழங்கப்பட்டுள்ள உரிம அனுமதி முற்றிலும் செல்லாததாகும்

18) கட்டிட மனையில் காலியுள்ள இடங்களில் மரங்கள் நடப்பட வேண்டும்

19) சொந்த செலவில் வடிகால் அமைத்து கட்டித்தின் கழிவுநீரை பேரூராட்சியின் சாக்கடையில் விழுமாறு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்

20) இக்கட்டிட உரிமத்திற்கு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் இதர தகவல்கள் தவறாக இருப்பின் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல

21) கட்டிடம் கட்டி முடிக்கப்படும்போது மழைநீர் சேகரிப்பு தொட்டி அவசியம் கட்டப்பட வேண்டும். இல்லாவிடில் சொத்து வரிவிதிப்பு செய்ய இயலாது

22) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் 17B ன்படி பேரூராட்சி பகுதிகளில் கட்டப்படும் 150 சதுர மீட்டர் பரப்பளவுடைய குடியிருப்பு மற்றும் இதர கட்டிடங்களுக்கு சூரிய ஒளியினை பயன்படுத்தி தண்ணீரை சூடாக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டும்

23) மேற்படி குடியிருப்புக்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பதிப்பதற்கு பேரூராட்சியின் உதவி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.

24) மேற்படி குடியிருப்புக்கு தெருவிளக்கு மின்வசதி செய்வதற்கு தமிழ்நாடு மின்வாரியத்தால் தெரிவிக்கப்படும் மதிப்பீடு தொகை செலுத்தப்பட வேண்டும்

25) கட்டிட பணிகள் முடிவுற்றபின் பொது திறவிடங்கள் மற்றும் சாலைகளை ஆஆாம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் செயல் அலுவலர், ஆஆாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி என்ற பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்து அசல் பத்திரம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

26) கட்டிடம் முடிவுற்ற பின் மேற்படி கட்டிடத்தை குடியிருப்பு பயன்பாட்டிற்கு கொண்டுவரும் முன் பொது சுகாதார துறையிடம் உரிய சான்று பெற்று கொள்ள வேண்டும்.

27) சேலம் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் உத்தரவு ந.க.எண். 2478/2019/சேம–3, நாள்.28.11.2019ல் தெரிவித்துள்ள பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) <u>As per Ministry of Environment, Forest and Climate change Notification, Dated. 22.12.2014. The Buildings Shall ensure sustainable environmental Management soild and liquid waste Management rain water harvesting and may use recycled materials such as fly ash bricks</u>

2) <u>As per G.O. (Ms) No. 161, H & UD Department, dated. 26.02.2013 "OSR Portion is earmarked as OSR and Kept open to sky without any construction</u>

3) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setbacks) வாகன நிறுத்தம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்

4) G.O. Ms No. 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019ன்படி தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும்

5) கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்தாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்

6) தீயணைப்பு துறையின் தடையின்மை சான்று மற்றும் பொது பணித்துறையின் வாய்க்கால் குறித்து உரிய தடையின்மை சான்று பெறப்பட வேண்டும். பெறப்பட்ட பின் மேற்கண்ட துறையின் நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

<u>பொது நிபந்தனைகள்</u>

1) உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்

2) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்

3) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைப்படத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் அனுமதி பெற வேண்டும்

...4

Scanned by CamScanner

4) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைப்படதில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 11.10.2002ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்

5) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்

6) Site Plan– ல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலைநிறுத்தப்பட வேண்டும்

7) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

8) ஆரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1) நாள். 03.11.2004ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்

9) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு "FLYASH BRICKS" மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்

10) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல் ) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்

11) மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

12) தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதியின் அடிப்படையில் இப்பேரூராட்சி தணிக்கையில் இழப்பு தொகை ஏற்படும் பட்சத்தில் அத்தொகையையும் செலுத்த வேண்டும்.

13) மேற்காணும் கட்டிடத்திற்கு மதிப்பீட்டில் 1% தொழிலாளர் நல வாரியத்திற்கு உரிய தலைப்பில் தங்கள் கட்டிடம் கட்டி முடிப்பதற்குள் செலுத்திவிட்டு அதன் நகல் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

<u>இணைப்பு:</u> அங்கீகரிக்கப்பட்ட வரைபட
நகல்கள்

3/1/2020

செயல் அலுவலர்
ஆலாம்பாளையம் பேரூராட்சி
நாமக்கல் மாவட்டம்

3/1/2020

பெறுநர்
நிர்வாக பொறியாளர்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
சேலம் கோட்டம், சேலம் – 636 007

<u>நகல் –</u>

1) இருக்கை எழுத்தர், தொடர் நடவடிக்கைக்காக
2) அலுவலக கோப்புக்கு

True copy –

**Assistant Executive Engineer,**
**Tamilnadu Slum Clearance Board,**
**Salem Division.**

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Salem Division, Salem-7.

Scanned by CamScanner